# அருகலை Series

அசலான் வைஃபை ஸ்மார்ட் ரிமோட்

அசலான் வைஃபை ஸ்மார்ட்
இன்ஸ்ட்டலேசன்

# அருகலை

இண்டர்நெட் தேவையில்லை

மொபைலில் உள்ள வைஃபை மட்டும்



அருகலை என்பது, Wi-Fi மூலம் மின் பொருட்களை இயக்கும் ஒரு ஸ்மார்ட் சாதனம். இது ஒரு இந்திய தயாரிப்பு. Software & Hardware இரண்டும் முழுமையாக தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்டது. அருகலை இரண்டு முறைகளில் (MODE) செயல்படும்.


ஆட்டோ ஸ்மார்ட் : கொடுக்கின்ற கால அட்டவணைப் (ROUTINES) படி தானாகவே இயக்கும். கால அட்டவணை பதிந்த பின் மொபைல் மற்றும் இண்டர்நெட் தேவை இல்லாமல் தானாகவே செயல்படும். கால அட்டவணையை மாற்றும் பொழுது மட்டும் மொபைல் தேவை. எப்பொழுதுமே இண்டர்நெட் தேவை இல்லை.


ரிமோட் : தேவைப்படும் பொழுது மொபைல் மூலம் ON / OFF செய்து கொள்ளலாம். உங்கள் மொபைல் தான் அதற்குரிய ரிமோட்.

ASLAAN®

# அருகலை

Google Play





3.22 MB அளவு உள்ள செயலி. மொபைல் மெமரி குறைந்த அளவே தேவைப்படும். இன்ஸ்டால் செய்யும் பொழுது உங்களின் தனிப்பட்ட தகவல்கள் எதுவும் கொடுக்கத் தேவையில்லை. உங்களின் தகவல்களுக்கு முழுப் பாதுகாப்பு. பிளே ஸ்டோரிலிருந்து இன்ஸ்டால் செய்யுங்கள்.

ASLAAN®

# அருகலை




அசலான் செயலியைப் பயன்படுத்த மொபைல் டேட்டா - இண்டர்நெட் - தேவையில்லை. எனவே, மொபைல் டேட்டாவை OFF செய்து விட்டு, Wi Fi யை ON செய்யுங்கள்.

ASLAAN®


அருகலை




அசலான் செயலியை Open செய்யுங்கள்.


ASLAAN®

# அருகலை




அருகலை மின் பொருளுக்கும், மொபைலுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்த செயலி (App) யில் Wi Fi யை தேர்ந்தெடுக்கவும்.


அருகலை




Wi Fi - சுவிட்சை ஆன் செய்தவுடன், வருகின்ற லிஸ்டிலிருந்து Aslaan... எனத் தொடங்கும் வை-ஃபை இணைப்பைத் தேர்ந்தெடுக்கவும்.


ASLAAN®

அருகலை





வழக்கம்போல், முதல் முறை மட்டும் பாஸ்வேர்ட் கேட்கும். அருகலை மின் பொருளின் பின்புறம் கொடுக்கப்பட்டுள்ள பாஸ்வேர்டை பதிவிடுங்கள். CONNECT - ஐ தொடுங்கள்.

# அருகலை





Connected, no Internet (1)- என்று வந்த சில நொடிகளில் `அசலானில் இண்டர்நெட் தொடர்பு இல்லை' (2) என்ற செய்தி வரும். `Tap for Options' (3) தொட்டு,

# அருகலை




இண்டர்நெட் இல்லாமல் தொடர்ந்து அசலான் வை-ஃபை இணைப்பில் இருக்க (Yes) அனுமதி கொடுங்கள்.


அருகலை




இந்த ஸ்கிரீன் வந்து செல்லும்.

ASLAAN®

# அருகலை





இப்பொழுது மொபைல் மூலம் அருகலை மின் பொருளை இயக்க முடியும்.

1. ஒன்றுக்கு மேற்பட்ட அருகலை சாதனங்கள் உள்ள இடத்தில் பிற அருகலை வை-ஃபை நெட்வொர்க்கை தேர்ந்தெடுக்கும் சுவிட்சு.

ASLAAN®

அருகலை





**தானியங்கி (ஸ்மார்ட்) - AUTO பயன்படுத்தும் முறை.**

முதலில், கால அட்டவணை (ROUTINE) போட வேண்டும். மொத்தமாக 4 கால அட்டவணைகள் (ROUTINES) உள்ளது.

1. ON செய்யும் நேரம்.
2. OFF ஆகும் நேரம்.
3. மேலே சொல்லிய கால அட்டவணையை (ROUTINE) செயல்படுத்த வேண்டிய நாள்கள்.


ASLAAN®

# அருகலை




மெனு புள்ளிகளை - 1 ஐத் தொட்டால் வரும் மெனுவில் `DEVICE SETUP' - 2 மூலம் வை-ஃபையின் பெயரை வசதிக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம்.

# அருகலை





பெயர் மாற்றும் பொழுது பாஸ்வேர்டும் மாற்ற வேண்டும். வை-ஃபை பெயர் அல்லது பாஸ்வேர்டு தவறாக கொடுத்து விட்டால், `Factory Reset' - 2 மூலம் ஆரம்ப வைஃபை பெயர் மற்றும் பாஸ்வேர்டுக்கு மாற்றிக் கொள்ளலாம்.

`Firmware Update' - 1 சாப்ட்வேர் அப்டேட் notification வந்தால், இதன் மூலம் அப்டேட் செய்து கொள்ளலாம்.

ASLAAN®

# அருகலை




4 சானல் அருகலை செயலி - இது கன்சீல்ட் சுவிட்ச் பாக்ஸ் மற்றும் எக்ஸ்டென்சன் பாக்ஸ் - மாடல்களில் கிடைக்கும். ஒரே அருகலை வைஃபை மூலம் 4 மின் பொருள்களை இயக்கலாம். 4 சானல்களுக்கும் தனித்தனியாக 4 கால அட்டவணை (ROUTINES) உண்டு. (பார்க்க - 5)

ASLAAN®

அருகலை




அருகலை மின் பொருளை (PRODUCT) - ON செய்யுங்கள்.

2.தற்பொழுது தொடர்பில் உள்ள அருகலை வை-ஃபையின் பெயர். இந்த பெயரை மாற்றிக் கொள்ளலாம். உதாரணம் : அருகலை கேட் லைட் வாங்கியிருந்தால், இந்த பெயரை `கேட் லைட்' என்று மாற்றிக் கொள்ளலாம். மொபைல் கீ போர்டில் உள்ள எந்த மொழியிலும் பெயர் வைத்துக் கொள்ள முடியும். பார்க்க : பக்கம் எண் - 15

3. ON சுவிட்ச்


4. AUTO / ROUTINES - இந்த இரண்டும் இணைந்து ஆட்டோ ஸ்மார்ட் வேலை செய்வதற்கான சுவிட்சு.

5. OFF சுவிட்சு.

ON & OFF சுவிட்சை பயன்படுத்திப் பாருங்கள்.

4. இந்தக் கால அட்டவணையை (ROUTINE) ON / OFF செய்யும் சுவிட்சு.

தற்பொழுது, ஞாயிறு தவிர்த்து மற்ற அனைத்து நாள்களிலும் காலை 9 மணிக்கு ON செய்து, இரவு 9 மணிக்கு OFF ஆகும்படி கால அட்டவணை (ROUTINE) தயார் செய்து உள்ளோம்.





இதைச் செயல்படுத்த HOME ஸ்கிரீன் சென்று

ASLAAN®

# அருகலை

AUTO வில் போட்டுவிட்டால் போதும்.




இனி, மொபைல் மற்றும் இண்டர்நெட் இணைப்பில்லாமலேயே மேலே சொன்ன (routine) கால அட்டவணைப் படி வேலை செய்யும்.